திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட பிரச்னைகள் எடுத்துச்சொல்லப்பட்டும், நீதிக்கு குறுக்கே யார் நிற்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். ஓய்வு பெற்ற நீதிபதி என்ற அளவில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாகச் சொல்லி விட்டு வெளிநடப்பு செய்யலாம், மீண்டும் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கவேண்டிய தேவையில்லை.

திரு. கே. கந்தசாமி : நான் சொல்ல விரும்புவதை சொல்லி விட வேண்டாமா?.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட இதைக் கண்டித்து வெளியேறு கிறோம் என்றுதான் சொன்னார்கள்.

திரு. கே. கந்தசாமி : நாங்கள் வெளியேறுகிறோமா இல்லையா என்பதை தெரிந்து கொள்வதற்கு முன்னால் தாங்கள் இப்படிச் சொல்வது என்ன முறை? எதிர்கட்சிகள் அவர்கள் கருத்தை எடுத்து சொல்லி வெளியே சென்றார்கள். அரசின் நல்லெண்ணத்தை எதிர்ப்பார்த்து, சட்டப்படி பிரச்னையை சுமுக மாக முடித்து வைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறேன். முக்கிய மாக ஓய்வு பெற்ற ஹைக்கோர்டு நீதிபதியையோ அல்லது ஸிட்டிங் செஷன்ஸ் ஜட்ஜையோ விசாரிப்பதற்கு போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சபையில் அமருகிறேன்.

THIRU M. A. LATHEEF: The answer and the explanation given by the Hon. Minister amply substantiate my charges. Hence with a profound sense of disappointment I do hereby, as a mark of my protest, stage a walk out.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) பூச்சி கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பருத்தி, மிளகாய் போன்ற பயிர்களை பூச்சிகள் சேதமாக்கியுள்ளதால் அவைகளைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் வேண்டிய 'டெமரான்' போன்ற பூச்சிக் கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு வழங்க வேண்டியது குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை வட்டாரத்திலும், மதுரை மாவட்டத்தில் தேனி பகுதியிலும் 1978-ம் ஆண்டு மார்ச்—ஏப்ரல் மாதங்களில் புருடினியா பூச்சி மொத்தம் 11,927 ஏக்கர் பருத்திப் பயிரை தாக்கியிருந்தது. பாதிக்கப்பட்ட இடங்களில் வேளாண்மை துறை அலுவலர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி தீவிர பயிர்பாதுகாப்பு முறைகளுக்கான பெருந்திட்டம் செயலாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 25 சதவிகித மான்ய விலையில் பூச்சி மருந்துகளை வழங்க அரசு ஆணையிட்டது. இப்பகுதி விவசாயிகளுக்கு ரூ. 3.3 இலட்சம் பெருமானமுள்ள பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டு புருடினியா தாக்குதல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் : பாதிக்கப்பட்ட இடங்களில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த தேவையான பூச்சி மருந்துகள், போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டது. தீவிர அளவில் மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புருடீனியா புழுவை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது :—

பின்வரும் பூச்சி மருந்துகளைக் கொண்டு மருந்து தெளித்து கட்டுப்படுத்துதல்.

குளோரோபைரிபாஸ் 20% இ.சி.	ஏக்கருக்கு	400	மி.லி.
டைகுளோர் வாஸ் ..	ஏக்கருக்கு	400	மி.லி.
பென்தைவேட் ..	ஏக்கருக்கு	800	மி.லி.

அரிசி, தவிடு, சர்க்கரை கழிவு அல்லது பழுப்பு சர்க்கரை ஆகியவற்றை கார்பரில் 50 சதம் (நீரில் கரையக்கூடியது) கலந்து மாலை நேரங்களில் பொறி வைப்பதன் மூலம் புழுக்களை அழித்தல், தாய் பூச்சிகள் உண்டாவதை அறிந்து கொள்ள விளக்கு பொறிகள் அமைத்து தடுப்பு முறைகளை முன்கூட்டியே மேற்கொள்ளுதல், புருடினியாவின் இளம் புழுக்களை கட்டுப்படுத்த அப்புழுவின் இயற்கை எதிரியான ''நுக்கிளியர் பாலி ஹெட்ரோஸிஸ் வைரஸை'' பயன்படுத்துதல்.

இவ்வகையான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுத்ததால் நடப்பு ஆண்டில் புருடீனியா தாக்குதல் முழு அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 30

மிளகாயில் புரூடினியா புழு : திருநெல்வேலி மாவட்டத்தில், மிளகாய் புரூடினியா புழுதாக்குதல் சிற்சில இடங்களில் காணப் பட்டது. மேற்குறிப்பிட்ட முறைகளின்படி உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

மிளகாயில் பேன் : இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் மிளகாயில் பேன் தாக்குதல் காணப்பட்டது. மிளகாயில் பேன் ஒரு நிரந்தர பூச்சியானதால் பூச்சி மருந்துகளை அவ்வப்பொழுது இட்டு கட்டுப்படுத்துதல் அவசியமாகும். மிளகாயில் பேனை கட்டுப்படுத்த வேளாண் துறையால் பின்வரும் முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பேன்களில் பெருக்கத்திற்கு அதிக அளவு இரசாயன உரங்கள் இடுவது உதவியாக இருப்பதால் அவ்வாறு அதிக இராசயன உரமிடுதலை தவிர்க்க வேண்டும். கட்டுப்பாடற்ற முறையில் பூச்சி மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். பூச்சி களை அழிப்பதற்குத் தேவையான சரியான அளவில் பூச்சி மருந்துகளை உபயோகிக்க வேண்டும்.

பின்வரும் பூச்சி மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றது :

ஊடுருவும் பூச்சி மருந்துகளான டைகுளோர்லாஸ், மற்றும் டாஸேலேனை பயன்படுத்துதல்.

புகையிலை சாற்றினை (நிக்கோட்டின்), மீன் எண்ணெய், ரெசின் சோப்புடன் சேர்த்து பயன்படுத்துதல்.

இம்முறைகளை பயன்படுத்தியதால் இப்பூச்சிகளின் தாக்கு தல் கட்டுப்படுத்தப்பட்டது.

மிளகாயில் பேனை சிறந்த முறையில் கட்டுப்படுத்த வல்ல ''டெமரான்' என்ற புதிய பூச்சி மருந்தை அளிக்கக் கோரி சில விவசாயிகள் இத்துறைக்கு முறையிட்டுள்ளார்கள்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள ''பயார்'' பூச்சி மருந்து கம்பெனி யினால் இப்புதிய பூச்சி மருந்தான ''டெமரான்'' கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. மிளகாயில் புரூடினியா மற்றும் பேன் பூச்சியினை இப்பூச்சி மருந்தைக் கொண்டு குடுமியான்மலை மற்றும் கோவில் பட்டியிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களில் முன்னோடி பரிசோத னைகள் நடத்தியதில் நம்பிக்கையூட்டும் முடிவுகள் பெறப் பட்டுள்ளன.

1979 மார்ச் 30] [திரு. ப. குழந்தைவேலு]

பூச்சி மருந்து சட்டம் 1968-ன் கீழ் மத்திய பூச்சி மருந்து கழகத்திலுள்ள உரிமம் வழங்கும் குழுவிற்கு இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்கிட இந்நிறுவனம் மனு செய்துள்ளது. உரிமத்துக்கான மனு மத்திய பூச்சிமருந்து கழகத்தின் பரிசீலனையிலுள்ளது இக்கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்திற்கு அனுமதி கிடைத்த பின்னரே அதிக அளவில் இப்பூச்சி மருந்தை இறக்குமதி செய்து உபயோகப்படுததமுடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமம் வழங்குவதில் ஒரு முடிவு எடுத்த பின்னரே ''டெமரான்'' பூச்சி மருந்தை தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகம் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்குவதில் விரைவான முடிவு எடுக்க ஏதுவாக இத்துறையால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் இத்துறையால் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி இப்பூச்சி மருந்தை கொண்டு விரிவான உயிரின மற்றும் வயல் வெளிச் சோதனைகளை இத்துறையால் நடத்தக் கோரியுள்ளன. கோவில்பட்டியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இப்பரிசோதனைகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) முகவை மாவட்டத்தில், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் கொடுக்க மறுப்பது குறித்து.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''முகவை மாவட்டத்திலுள்ள, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் கொடுக்க மறுப்பதால், நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் உள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் தற்போது 135 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்கின்றன. இவைகளில் 26,854 தறிகள் உள்ளன. மேற்கூறிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் விநியோகம்